**செ.கு.எண் :01** **நாள் : 05.01.2022**

**இன்று (5.1.2022) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், ஆளுநர் உரையின்போது வெளிநடப்பு செய்து மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் அளித்த செய்தியாளர் பேட்டிக்கு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் பதிலளித்து செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:**

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய சிறப்பான இந்த ஆட்சியை, கடந்த 7 மாத காலமாக அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய எண்ணற்றத் திட்டங்கள், மிகச் சிறப்பான ஒரு நல்ல ஆட்சி, இந்தியாவில் இருக்கக்கூடிய மாநில முதலமைச்சர்களில் இவரே முதன்மையானவர் என்று பல்வேறு பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் போற்றிப் பாராட்டத்தக்க வகையில் ஒரு சிறப்பான பெயரெடுத்து, ஒரு சிறப்பான நிர்வாகத்தை எல்லோருக்கும் ஒரு முன்மாதிரியான நிர்வாகத்தை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு நிறைவேற்றி வருகிறார்கள்.

அதனுடைய ஒரு பகுதியாக, இன்றைக்கு ஆளுநர் அவர்களுடைய உரையில் அரசாங்கத்தினுடைய கொள்கைத் திட்டங்கள், இந்த அரசு மிகக் குறைந்த காலத்தில் எவ்வளவு அற்புதமான திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம் என்பதற்கெல்லாம், ஒரு தொகுப்பாக அரசினுடைய திட்டங்களை எல்லாம், முன்மாதிரியாக எடுத்துச் சொல்லி, சிறப்பான ஆளுநர் உரையை இன்றைக்கு அளித்திருக்கிறார்கள்.

அதிலும் மிகக் குறிப்பாக நம்முடைய மாநிலத்தினுடைய கல்வி வளர்ச்சியை மேலும் உறுதி செய்யக்கூடிய வகையில் 5 ஆண்டு காலத்தில் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மாநிலக் கல்வி வளர்ச்சியில் பெருந்தொண்டாற்றக்கூடிய கல்வி நிறுவனங்களை மிகச் சிறந்த அளவிலே உருமாற்றுவதற்கான ஒரு பெருந்திட்டம் 5 ஆண்டுகளிலே உருவாக்கப்படும். ஏறத்தாழ 27,000 - க்கும் மேற்பட்ட அரசு தொடக்கப் பள்ளிகளில், இந்த ஆண்டு அத்தனைப் பள்ளிகளிலுமே ஒரு Smart Class Room உருவாக்கக்கூடிய திட்டம் மிகப்பெரிய அளவிலே செயல்படுத்தப்படும். 6,992 நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் என

அத்தனைப் பள்ளிகளிலும் புதிய கட்டிடங்கள் உருவாக்கப்படும். Langugage Laboratory என்று சொல்லக்கூடிய நம்முடைய மொழி ஆய்வகங்கள், அதைப்போல உயர்தர தொழில்நுட்பத்திலான அறிவியல் ஆய்வகங்கள் உருவாக்கப்படும். பள்ளி வகுப்பறைக் கட்டிடங்கள் உருவாக்கப்படும் என்றெல்லாம் கல்வி வளர்ச்சிக்கு மிகப்பெரிய ஊக்கத்தையும் அதேபோல, மாண்புமிகு முதலமைச்சருடைய அருமையான அறிவிப்பாக அவர்கள் முன்னிறுத்தக்கூடிய ஒரு உயர்ந்த கொள்கையாக 2030 ஆம் ஆண்டுக்குள், ஒரு இலட்சம் கோடி டாலர் உருவாகக்கூடிய அளவிற்கு ஒரு பெரிய பொருளாதார சிறப்பினை நம்முடைய தமிழ்நாடு பெறுவதற்கான திட்டம் செயல்திட்டமாக உருவெடுக்கப்படும் என்பதற்காகவும், அதற்கான முன் நடவடிக்கைகளாக மருந்து பொருள்கள், மருந்துக் கருவிகள் செய்யக்கூடிய அந்தத் திட்டத்திற்கான தனிப் பூங்காக்கள், நம்முடைய இந்தியத் திருநாட்டிலே முதன்முறையாக தூத்துக்குடியிலே Furniture Park அறைகலன்கள் பூங்கா உருவாக்குவதற்கான திட்டம் என்று பல முக்கியமான திட்டங்களை மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அரசினுடைய கொள்கைத் திட்டங்களாக அறிவித்திருக்கிறார்கள்.

ஆனால் பிராதான எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய அதிமுக, அதை ஏற்றுக்கொள்ளாமல் இன்றைக்கு வெளிநடப்பு செய்வதோடு மட்டுமல்லாமல், இந்த அறிவிப்புகளை எல்லாம் இந்த ஆறு மாத காலத்திலே இந்த அரசாங்கம் செய்திருக்கக்கூடிய செயல் திட்டங்கள் எல்லாம் எங்கே உட்கார்ந்து நாம் திருச்செவி சாத்திட வேண்டும், அந்த நிலை தங்களுக்கு வந்துவிடுமோ என்ற படபடப்பில் எதிர்க்கட்சியினுடைய தலைவர் திரு.எடப்பாடி பழனிச்சாமி அவர்களுடைய தலைமையில் அதிமுகவினர் இன்றைக்கு வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். வெளிநடப்பு செய்வதிலே எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. எதிர்க்கட்சி தன்னுடைய ஜனநாயக பாதையை தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறது. அதிலே அவர்கள் வெளிநடப்பு செய்வதிலே ஆச்சரியப்படுவதற்கோ அல்லது அதை அதிருப்தி கொள்வதற்கோ ஏதுமில்லை. ஆனால், வெளியே வந்து பத்திரிகையாளர்களை சந்தித்து இருக்கக்கூடிய திரு. எடப்பாடி பழனிசாமி அவர்கள், பொய்யுரைகளினுடைய முழுத் தொகுப்புரையாக தன்னுடைய கருத்துக்களை இந்த ஆட்சியின் மீது இங்கே அவிழ்த்துவிட்டு சென்றிருக்கிறார் என்பதை பார்க்கிறபோது, எனக்கு அதை எண்ணி

விலா நோக சிரிப்பதா அல்லது வேதனை கொள்வதா என்று தெரியவில்லை. உதாரணமாக, திரு.எடப்பாடி பழனிசாமி அவர்கள் உங்களிடத்திலே பேசுகிறபோது, ஏதோ இந்த ஆட்சி வந்து ஆறு மாதத்திற்குள்ளாக போதைப் பொருள்களினுடைய நடமாட்டம் கூடிவிட்டதாகவும், குட்கா போன்ற போதைப் பொருள்கள் எல்லாம் நடமாட்டத்திலே அதிகமாக இருப்பதாகவும் ஒன்றை சொல்லியிருக்கிறார்.

நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். குட்கா என்கின்ற ஒரு போதை வஸ்து இருப்பதையே இந்த தமிழ்நாட்டு முழுவதுக்கும் பிரபலப்படுத்தப்பட்ட ஒரு ஆட்சி இருக்கிறது என்று சொன்னால், அந்த ஆட்சி திரு.எடப்பாடி பழனிசாமி அவர்கள் தலைமையில் நடந்த, கடந்த 5 ஆண்டுகளிலே நடந்த அதிமுக ஆட்சி. அந்த ஆட்சியில் தான் குட்கா போதைப் பொருளுக்காக என்னென்னவெல்லாம் நடைபெற்றது. அன்றைக்கு இருந்த ஆட்சியாளர்கள், அன்றைக்கு இருந்த அதிகாரிகள் மீது எல்லாம் எந்த அளவிற்கு அவருடைய புகழ் நாடு முழுவதும் பரவி, இன்னும் சொல்ல வேண்டுமென்றால், சந்தி சிரித்த ஆட்சி அதிமுக ஆட்சி போதைப் பொருள்கள் விஷயத்திலே. இன்றைக்கு வந்து போதைப் பொருள்கள் பற்றிப் பேசுவதற்கு திரு.எடப்பாடி பழனிசாமிக்கோ அல்லது அவருடைய தலைமையில் இருக்கக்கூடிய அதிமுகவிற்கோ எந்த வகையிலே அருகதை இருக்கிறது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அதைப்போல அவர் பேசுகிறபோது, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் எல்லாம் இந்த ஆட்சியிலே பெருகிவிட்டதாகச் சொல்லியிருக்கிறார். பொள்ளாச்சியில் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டார்களே, எத்தனையோ இளம் சிறு குழந்தைகள் கதறி அழுதார்களே, அதையெல்லாம் யார் ஆட்சி காலத்தில் நடந்தது என்பதை திரு. எடப்பாடி மறந்து விட்டாரா? அவற்றுக்கெல்லாம் தீர்வு காணப்பட்டது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே என்பதை திரு.எடப்பாடி பழனிசாமி அவர்கள் மறைக்கப் பார்க்கிறாரா? கதற கதற இளம் பெண்களை எல்லாம் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டவர்கள் மீது என்ன நடவடிக்கைகள் அவர்கள் ஆட்சியில் எடுத்தார்கள்? அதிலே சம்பந்தப்பட்டவர்கள் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது என்று கேட்டால், ஒன்றுமில்லை. அன்றைக்கு அதிலே யார்

யாரெல்லாம் ஈடுபட்டார்களோ, அவர்களை எல்லாம் இன்றைக்கு மிகப் பெரிய பொறுப்புகளிலே கொண்டு வருவதற்காக அவர்களை காத்தார்கள் என்பது தான் உண்மை என்பதை நாட்டு மக்கள் மிக நன்றாக உணர்ந்திருக்கிறார்கள்.

அடுத்து ஒன்றைச் சொல்கிறார்கள், நம்முடைய எடப்பாடி பழனிசாமி அவர்கள் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது, துப்பாக்கிக் கலாச்சாரம் வந்துவிட்டது என்று கூறுகிறார். துப்பாக்கிக் கலாச்சாரம் யாரிடமிருந்து வந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அப்பாவி மக்களை எங்கேயாவது சுட்டுக் கொன்றிருக்கோமா? ஆனால், இதே ஸ்டெர்லைட் பிரச்சனை வருகிறபோது, அப்பாவி மக்கள் 13 பேரை நிறுத்தி வைத்து ஒவ்வொருவராக குறி பார்த்து சுட்டு வீழ்த்திய ஆட்சி, துப்பாக்கிக் கலாச்சாரைத் தூக்கிப் பிடித்த ஆட்சி, சட்டம் ஒழுங்கை முற்றிலுமாக, சீர்குலைத்து, சந்தி சிரிக்க வைத்து அந்த போலீஸ் போர்ஸ்க்கு இருக்கக்கூடிய ஒரு கௌரவத்தை குலைத்த ஆட்சி யார் என்று கேட்டால் எடப்பாடி பழனிச்சாமி ஆட்சி.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், டிஜிபியைப் பற்றி சொல்கிறார், டிஜிபி அறிக்கை விடுகிறார் என்று. அவருடைய ஆட்சியில் என்ன நடந்தது. டிஜிபி என்று ஒருவர் இருந்தார். ஆனால், அதற்கும் மேலாக ஸ்பெஷல் டிஜிபி என்று ஒருவரை கொண்டு வந்து அந்த டிஜிபியை இயங்கவிடாமல் தடுத்த ஆட்சி எடப்பாடியுடைய ஆட்சி. அப்படி போடப்பட்ட ஸ்பெஷல் டிஜிபி மேலேயே பாலியல் குற்றச்சாட்டு வந்து அவர் இன்றைக்கு ஒவ்வொரு கோர்ட்டுகளாக ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறார் என்று கேட்டால், எடப்பாடி பழனிசாமி ஆட்சியினுடைய இலட்சணம் எந்த அளவிலே இருக்கிறது. அவர்கள் இன்றைக்கு சட்டம் ஒழுங்கைப் பற்றி, பாலியல் பலாத்காரத்தைப் பற்றி எந்த முகத்தை வைத்து கொண்டு பேசுகிறார் என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

அதைப்போல, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய டெல்டா மாவட்டத்தினுடைய விவசாயிகளுக்கு எந்த நிவாரணமும் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். இன்றைக்கு நிவாரணங்கள் முழுமையாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. நிவாரணங்களை கொடுப்பதற்கான சரியான கணக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. நிவாரண இழப்பீடுகளை வழங்குவதற்கான அரசாணை இன்றைக்கு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே அவற்றையெல்லாம் சரியான

முறையிலே எடுத்து அந்த கணக்கீடுகளின்படி வழங்க இருக்கிறோம். அவர்கள் கூட்டணியில் மத்திய அரசில் இருக்கக்கூடிய பிஜேபி அரசை வலியுறுத்தி தேசிய பேரிடர் மேலாண்மையிலிருந்து அந்த நிவாரணத் தொகையை வழங்குவதற்கு அவர்கள் மத்தியிலே தங்களுடைய செல்வாக்கை பயன்படுத்துவதை விட்டு விட்டு, இன்றைக்கு இந்தப் பிரச்சனையை அரசியலாக்க முற்படுவது என்பது கடுமையாக கண்டிக்கத் தக்கது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மழை வெள்ளத்ததைப் பற்றி அவர்கள் பேசுகிறார்கள். இவர்களுடைய காலத்தில் மழை வந்தபோது எந்த இடத்திற்கு போய் முதலமைச்சர் நின்றார். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட அத்தனை இடங்களுக்கும் போய் நின்றார். திடீரென்று எதிர்பார்க்காத வகையில் அன்றைக்கு சென்னையில் மாமழை கொட்டுகின்றபோது, திருச்சி மாநகரத்தில் இருந்த முதலமைச்சர் உடனடியாகத் திரும்பிவந்து, வீட்டிற்குப் போய் ஓய்வு எடுத்துக்கொள்ளவில்லை அவர்களைப் போல. நேரடியாக களத்திற்கு வந்தார், இரவு 1 மணி வரை களத்திலே இருந்தார், அந்தப் பகுதிகளைப் பார்வையிட்டு அதற்கான நிவாரணங்களை வழங்குவதற்கு உத்தரவிட்டார். இன்னும் சொல்லவேண்டுமென்று சொன்னால், மழை வெள்ளம் வருகிறபோது, மழை வடிந்ததற்குப் பிறகும்கூட மீண்டும் அந்த இடங்களுக்குச் சென்று, மழை மீண்டும் வந்தால், அதில் எந்தவிதமான பிரச்சனையும் வராத அளவிற்கு என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை மழை முடிந்தபிறகும் அந்த இடத்திற்குச் சென்று பார்த்த ஒரே முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர். நான் மேலும் ஒருபடி போய்க்கூட சொல்வேன், மழை வெள்ளத்தில் முழங்கால் அளவிற்குத் தண்ணீர் வருகிறபோது, பார்க்கக்கூடிய இடங்களிலெல்லாம் மக்கள், குறிப்பாக பெண்கள், இந்த மழையில், இந்த சகதியில், இந்த வெள்ளத்தில் நீங்கள் ஏன் வரவேண்டும்? நீங்கள் அங்கேயிருந்துகொண்டு சொன்னால் போதாதா என்று அவர்கள் உரிமையுணர்வோடு கேட்ட ஒரு முதலமைச்சர் இருக்கிறார் என்று சொன்னால், தமிழ்நாட்டின் வரலாற்றில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தளபதிதான் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பொங்கலுக்கான பணம் கொடுக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் எதற்காக பொங்கலுக்கு பணம் கொடுத்தீர்கள்? அதற்கு முன்னால் ஐந்து வருடம் ஆட்சியில் இருக்கும்போதெல்லாம் பொங்கலுக்கு பணம் கொடுக்கவில்லையே. போன வருடம் தேர்தல் வரப்போகிறது என்பதற்காக பொங்கலுக்காக கொடுத்தீர்கள். ஆனால், இந்த ஆட்சி அப்படியல்ல, நாங்கள் சொன்னதை நிறைவேற்றியிருக்கிறோம். ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் கொரோனா நிவாரணத் தொகையாக ரூ.4000 வழங்குவோம் என்று சொன்னோம். ரூ.4000 கொரோனா நிவாரணத் தொகையை முழுமையாக நாங்கள் வழங்கியிருக்கிறோம். சொன்னதை நாங்கள் செய்திருக்கிறோம். இப்போதுகூட, பொங்கல் பரிசாக 19 பொருள்கள் அடங்கிய தரமான பொருள்களை முழுமையாக வழங்கியிருக்கிறோம். அது வழங்குவதோடு மட்டுமல்ல, இன்றைக்கு பொங்கலுக்காக முழு கரும்பையும் சேர்த்தே அவர்களுக்கு வழங்கக்கூடிய ஆட்சியாக இன்றைக்கு இந்த ஆட்சி திகழ்கிறது. எனவே, இவற்றையெல்லாம் அவர்களாலே பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

அம்மா மினி கிளினிக்கைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆட்சி நிச்சயமாக அரசியல் காழ்ப்புணர்ச்சிக்கான ஆட்சி இல்லை. அம்மா மினி கிளினிக் என்று ஆரம்பித்துவிட்டு, அங்கு டாக்டரையும் நியமிக்கவில்லை, நர்சையும் நியமிக்கவில்லை. பெயருக்காக வைத்துவிட்டு, அந்தக் கட்டடத்திற்கு வாடகையும் கொடுக்காமல் சென்று விட்டீர்கள். எனவே, பெயருக்காக டாக்டரும் இல்லாத, நர்சும் இல்லாத ஒரு இடத்திற்கு கிளினிக் என்று நீங்கள் பெயர் வைத்த காரணத்தினால்தான், உள்ளபடியாக இருக்கக்கூடிய மருத்துவக் கட்டமைப்புகளை நாம் சிறப்பாக செய்ய வேண்டும். எப்படி இந்த கொரோனா பெருந்தொற்றை இந்த ஆறுமாத காலத்தில் இரண்டாவது அலையை நாங்கள் கட்டுப்படுத்தியிருக்கிறோம். மூன்றாவது அலைக்கு முன்பாக அனைவருக்கும் தடுப்பூசி மிகப்பெரிய அளவில் போட்டு முடித்திருக்கிறோம். இவற்றையெல்லாம் செய்யக்கூடிய இந்தப் பொது சுகாதாரக் கட்டமைப்பில் பெரும் அக்கறை கொண்டுள்ள முதலமைச்சர் ஒவ்வொரு நாளும் அவரே ஆய்வு செய்கிறார்கள். எனவே, அரசியல் காரணங்களுக்காக அம்மா கிளினிக்கை மூடவேண்டும் என்று சொன்னால், அம்மா உணவகங்கள் ஏன் இயங்கிக்

கொண்டிருக்கிறது என்பதற்கு அவர்கள் என்ன பதில் வைத்திருக்கிறார்கள்? எனவே நிச்சயமாக அரசியல் காழ்ப்புணர்ச்சியின்பால் இந்த அரசு செயல்படுவது இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நகைக்கடன்களை கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். நாங்கள் கேட்கிறோம், நீங்கள் உங்கள் காலத்தில் பொறுப்பில் இருந்தபோது, யாருக்கெல்லாம் நகைக்கடன்கள் கொடுத்திருக்கிறீர்கள் என்று கணக்கு எடுத்துப் பார்த்தால், திருவண்ணாமலையில் ஒருவர் மட்டும் 62 பெயர்களில் ஒன்றரை கோடி ரூபாய்க்கு மேல் கடன் வாங்கியிருக்கிறார், எல்லாம் 10 பவுன் அளவிற்கு வைத்து வாங்கியிருக்கிறார். இந்த மோசடிகளுக்கு, இந்த ஊழலுக்கு யார் துணை போயிருக்கிறார்கள்? யாருடைய ஆட்சியில் நடந்திருக்கிறது? எனவே, அவற்றையெல்லாம் எடுத்து இன்றைக்கு சரிபார்த்து, யாரெல்லாம் தவறு செய்திருக்கிறார்களோ, யாரெல்லாம் முறைகேட்டில் ஈடுபட்டிருக்கிறார்களோ, யாருக்கெல்லாம் முறைகேடாக அந்தக் கடன்கள் வழங்கப்பட்டிருக்கிறதோ அவற்றையெல்லாம் நீக்கிவிட்டு, உண்மையான, தகுதியானவர்களுக்கு அதை வழங்க வேண்டும் என்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார். எனவே, அந்த வகையில் அவர்களுக்கு அது வழங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி அவர்கள் இன்றைக்கு வெளிநடப்பு செய்ததற்குப் பிறகு அவர் அளித்திருக்கக்கூடிய அனைத்தும் பொய்யுரைகளின் கட்டுரைகளாக அமைந்திருக்கிறது, புறம் தள்ளப்பட வேண்டியவைகளாக இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நல்லாட்சி குறித்து நாடும், ஏடும் பாராட்டுகிறது. நாட்டு மக்கள் இன்றைக்கு பாராட்டுகிறார்கள். எனவே, இவர்கள் சொல்வதிலே நாட்டு மக்களின் நம்பிக்கை வரப்போவதில்லை. நாட்டு மக்கள் எள்ளி நகையாடுகிறார்கள், ஏற்றுக்கொள்ளாமல் ஒதுக்கிப் புறம் தள்ளுவார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி: கொடநாடு கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் 5 பேர் நியூஸ் 18 நடத்திய கள ஆய்வில், தங்களிடம் கொச்சியில் வைத்த பேரம் பேசப்பட்டது, இது தொடர்பாக நாங்கள் எந்தக் கருத்தையும் தெரிவிக்கக்கூடாது என்று. அதில் சமரசம் பேசியவர் கடந்த ஆட்சியில் எடப்பாடி பழனிசாமியின் நிழலாக கருதப்பட்ட இளங்கோவன் என்ற செய்தியை எப்படி பார்க்கிறீர்கள்?

பதில்: இதைத்தான் நான் ஏற்கனவே சொன்னேனே. சட்டம் ஒழுங்கு எப்படியிருந்தது, Police Force என்ன, என்ன செய்திருக்கிறார்கள், இன்றைக்கு இருக்கக்கூடிய DGP-யை குறை சொல்லக்கூடியவர்கள், தமிழ்நாட்டினுடைய சட்டம் ஒழுங்கைப் பற்றி பேசக்கூடியவர்கள், குற்றப்புலனாய்வு குறித்தெல்லாம் அக்கறையோடு பேசக்கூடியவர்கள், இந்த ஆட்சியின் மீது குற்றம் சொல்லியிருப்பவர்கள், தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக என்னென்ன செய்கிறார்கள் என்பதையெல்லாம் இதில் உண்டு. இந்த ஆட்சியைப் பொறுத்தமட்டில், யார் தவறு செய்திருந்தாலும், சட்டப்படி அவர்களையெல்லாம் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, நீதியை நாங்கள் நிலைநிறுத்துவோம். அது யாராக இருந்தாலும் சரி, நீங்களே சொல்லியிருப்பதைப் போல இது ஒரு பானைச் சோற்றிற்கு கொடநாடு விவகாரம் ஒரு சோறு பதம். எனவே, கொடநாடு விவகாரத்தில் எப்படி இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதோ, அதே நடவடிக்கைகளை சட்டத்தின் முன் நிறுத்தக்கூடிய வகையில், சட்டத்தின் வழிவகை கொண்டு, இவற்றிற்கான ஒரு முடிவைக் கொண்டுவரக்கூடிய அளவில் நிச்சயமாக நாங்கள் செயல்படுவோம். இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால், அவர்கள் தங்கள் ஆட்சியிலே அதிகாரத்தைப் பயன்படுத்தி, காவல் துறையில் துஷ்பிரயோகங்களை உருவாக்கி அவர்கள் எல்லாம் செயல்பட்டார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

கேள்வி: அம்மா கிளினிக்கை முறைப்படுத்தலாமே?

பதில்: அம்மா கிளினிக்கை நீங்கள் கட்டடத்திற்கே வாடகை கொடுக்காமல், எந்தவிதமான ஒரு கட்டமைப்பும் இல்லாமல் இவர்களாகச் சென்று திறந்து வைத்தார்கள். திறந்து வைத்தது எப்படி திறந்துவைத்தார்கள் என்பதை நீங்கள் எல்லாம்

பார்த்திருப்பீர்களே. பலூனாக கட்டி வைத்தார்கள், ஒவ்வொரு பலூனாக மந்திரி சென்று குத்தி, குத்தி உடைத்தார். அந்த பலூனும் புஸ் என்று ஆகிவிட்டது, அம்மா கிளினிக்கும் புஸ் என்று ஆகிவிட்டது. எனவே, அந்த கிளினிக்குகள் செயல்படவில்லை. ஏற்கனவே ஒவ்வொரு இடத்திலும் இருக்கக்கூடிய கிளை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றிலுள்ள ஒன்று, இரண்டு பேரை கடன் வாங்கினீர்கள், அதுவும் கெட்டுப் போனது, இதுவும் கெட்டுப் போனது. எனவே, இருக்கக்கூடிய இடங்களில் சிறந்த முறையில் அந்தக் கட்டமைப்புகள் தரப்படும்.

கேள்வி: நகைக்கடன் விவகாரத்தில் இப்போது போடப்பட்டிருக்கும் நிபந்தனைகளை நீங்கள் தேர்தல் காலத்தில் சொல்லவில்லை என்று கூறுகிறார்களே?

பதில்: நாங்கள் உள்ளே வந்து பார்க்கும்போதுதான் தெரிகிறது. நீங்கள் இவ்வளவு பேருக்கு என்று சொல்கிறீர்கள். நகைக்கடன்களை நாங்கள் தள்ளுபடி செய்வோம் என்று சொல்கிறோம். உள்ளே வந்து பார்த்தால், நீங்கள் தானே கூட்டுறவு சங்கத் தேர்தல் நடத்தி உள்ளே இருக்கிறீர்கள். எப்படி நகைக்கடன்களை கொடுத்திருக்கிறீர்கள்? ஒரு தனிநபர் 62 பெயரில் 1.5 கோடி ரூபாய்க்கு வாங்கிக் கொண்டு செல்வார், அவருக்கு நாங்கள் கொடுக்க வேண்டும் என்று சொல்ல வருகிறீர்களா? அதை அவர்கள் சொல்கிறார்களா? யார் தவறு செய்திருக்கிறார்களோ, அவற்றை சரிசெய்தால்தான் மீதமுள்ளவர்களுக்கு, உண்மையாக அதில் கஷ்டப்படுபவர்கள் தங்கள் கஷ்டத்திற்காக நியாயமான முறையில் யார் நகைகளை அடகு வைத்திருக்கிறார்களோ அவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு வழங்கப்படும்.

கேள்வி: மழைநீர் வடிகால் எப்போது முழுமையாக முடிக்கப்படும்?

பதில்: அதற்கான முழு பணிகளை நாம் ஆரம்பித்திருக்கிறோம். இந்த மழை முடிந்தபிறகு அந்தப் பணிகள் உடனடியாகத் துவங்கும்.

கேள்வி: வடகிழக்குப் பருவமழைக்கு முன்னதாகவே வடிகால்கள் சீரமைத்திருந்தால் இவ்வளவு வெள்ளம் வந்திருக்காதே?

பதில்: அந்தக் கேள்வியை உங்கள் முன் பேசிய மதிப்பிற்குரிய எடப்பாடி பழனிசாமி அவர்களை நீங்கள் கேட்டிருக்க வேண்டும். ஐந்து வருடங்கள் அவர்கள் எதுவுமே செய்யவில்லை. ஐந்து மாதத்திற்குள்ளாக முதலமைச்சர் ஒவ்வொரு இடத்திற்கும் வந்திருக்கிறார், பார்த்திருக்கிறார், பணிகளை முடுக்கிவிட்டிருக்கிறார்.

கேள்வி: Anti-NEET மசோதா தொடர்பாக All Party Delegation அமைச்சரை சந்திப்பதற்காக டெல்லிக்குச் சென்றிருந்தார்கள், அதற்கு, இதுவரை appointment தரவில்லையே?

பதில்: நீட் நிலைப்பாட்டில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். இன்றைக்கு ஆளுநர் உரையில்கூட, நீட் நிலைப்பாட்டைப் பற்றி நாங்கள் சொல்லியிருக்கிறோம். தொடர்ச்சியான முயற்சிகளை அதிமுக-வைப் போல ஒரு கண் பூச்சுக்காக அல்லது உண்மைகளை மறைத்துவிட்டு நாடகமாடுவதற்கு இல்லாமல், உளப்பூர்வமாக, நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்களின் எதிர்காலம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிக உறுதியாக இருக்கிறார். எனவே தான், ஒரு முழுமையான Delegation அனுப்பியிருக்கிறோம், அவர்களும் எங்களுடன் வந்திருக்கிறார்கள், நான் மறுக்கவில்லை. ஆனால் Delegation-க்கு வருகிறார்களோயொழிய, உள்ளபடியான அழுத்தத்தை அவர்கள் கொடுக்கவில்லை, அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்போதும் தரவில்லை.

கேள்வி: இரண்டு முறை சென்றபின்பும், Appointment கொடுக்காததை எப்படி பார்க்கிறீர்கள்?

பதில்: போகிறார்கள், கொடுக்க வேண்டும் என்பது எங்களுடைய கருத்து. யாராக இருந்தாலும், போகும் போது கொடுக்க வேண்டும், கொடுப்பார்கள் என்று நாங்கள் நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறோம்.

- - - -

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**